சிறப்புக் கூட்டம்...

தலைமைச் செயலகத்தில் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024–இல் ஈர்க்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், முதலீடுகளின் முன்னேற்றம் குறித்து கண்காணிக்க அமைக்கப்பட்ட சிறப்புக் குழுவின் கூட்டம். உடன் தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா.

போதையால் தற்கொலை செய்துகொள்வோரின் எண்ணிக்கை உயர்வு

உயர்நீதிமன்றம் கவலை

மதுரை, ஜூலை 10: கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களால் உடல் நலம் பாதிக்கப்பட்டு, தற்கொலை செய்துகொள்வோரின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருவதாக உயர் நீதிமன்ற மதுரைக் கிளை புதன்கிழமை கவலை தெரிவித்தது.

மதுரை போதைப் பொருள் தடுப்புப் பிரிவு போலீஸார் கடந்த 2016–ஆம் ஆண்டு மதுரை–திருச்சி நான்கு வழிச் சாலையில் வாகன சோதனையில் ஈடுபட்ட போது, சிட்டம்பட்டி அருகே சென்ற காரை நிறுத்தி சோதனையிட்டனர். அதில் இருந்த 85 கிலோ கஞ்சாவை போலீஸார் பறிமுதல் செய்ததுடன் இதில் தொடர்புடைய சிலரைக் கைது செய்தனர். இந்த வழக்கை விசாரித்த விசாரணை நீதிமன்றம், கணேசன் என்பவருக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது. இந்தத் தண்டனையை ரத்து செய்யக் கோரி கணேசன், சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனுவை புதன்கிழமை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதி கே.கே. ராமகிருஷ்ணன் பிறப்பித்த உத்தரவு:

நோய்களைக் குணப்படுத்த மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. இவற்றை சிலர் போதைப் பொருளாகப் பயன்படுத்தி சமூகத்

துக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றனர். இந்த நிலையில், இந்தியாவில் 17 வயதுக்குள்பட்ட சிறார்கள் 1.85 கோடி பேர் போதைக்கு அடிமையாகி இருப்பதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. போதையால் பல்வேறு குற்றச் சம்பவங்களில் ஈடுபடுவதோடு, உடல் நலம் பாதிக்கப்பட்டும் தற்கொலையும் செய்து கொள்கின்றனர். போதைக்கு அடிமையானவர்கள் தற்கொலை செய்வது ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. இதைத் தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

போதைப் பொருள்களால் இளைஞர்கள், அப்பாவிகள் பாதிக்கப்படுவதைத் தடுக்க வேண்டும். போலீஸார் பறிமுதல் செய்யும் போதைப் பொருள்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்கும் போது, அவற்றை முறைப்படி திரும்பப் பெற்று, அவை மீண்டும் விற்பனைக்கு செல்லாதபடி அழிக்க வேண்டும். மேலும், போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்ட வழக்குகளில் குற்றச்சாட்டை நிரூபிக்க முடியாதபட்சத்தில், அரசுத் தரப்பில் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து, உரிய அனுமதியுடன் அவற்றை அழிக்க வேண்டும்.

இந்த வழக்கில் மனுதாரர், கஞ்சா கடத்தி சென்றதை விசாரணை நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது. எனவே, அவரது மனுவைத் தள்ளுபடி செய்வதுடன், விசாரணை நீதிமன்றம் விதித்த தண்டனை உறுதி செய்யப்படுகிறது என்றார் நீதிபதி.

விக்கிரவாண்டி இடைத்தேர்தல்

வாக்குப் பதிவு மையத்தில் பெண்ணுக்கு கத்திக் குத்து

விழுப்புரம், ஜூலை 10: விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலையொட்டி, கண்டாச்சிபுரம் அருகே வாக்குப் பதிவு மையத்தில் புதன்கிழமை வாக்களிப்பதற்காக வரிசையில் காத்திருந்த பெண்ணை கத்தியால் குத்திய வரை போலீஸார் கைது செய்தனர்.

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப் பதிவு 276 வாக்குப் பதிவு மையங்களில் புதன்கிழமை நடைபெற்றது. டி.கொசப்பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி வாக்குப் பதிவு மையத்தில் வாக்களிப்பதற்காக, அந்தப் பகுதியைச் சேர்ந்த பெண்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

அப்போது, அங்கு வரிசையில் நின்றிருந்த கனிமொழியை (46) அதே பகுதியைச் சேர்ந்த ஒருவர் கத்தியால் குத்தினார். இதில், காயமடைந்த கனிமொழியின் அலறல் சப்தம் கேட்டு, பணியிலிருந்த காவலர்கள் கத்தியால் குத்திய நபரை விரட்டிப் பிடித்து விசாரணை நடத்தினர்.

இதில், அவர் அதே கிராமத்தைச் சேர்ந்த சு.ஏழுமலை (52) என்பது தெரிய வந்தது. தொடர்ந்து, கண்டாச்சிபுரம் போலீஸார் அவர் மீது வழக்குப் பதிந்து கைது செய்தனர்.

கத்திக்குத்தில் காயமடைந்த கனிமொழிக்கு முதலுதவி சிகிச்சை அளித்து வீட்டுக்கு அனுப்பி வைத்தனர். கத்தியால் குத்தியதற்கான காரணம் குறித்து ஏழுமலையிடம் போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

வாக்காளர்களுக்கு இடது கை ஆள்காட்டி விரலில் மை

விழுப்புரம், ஜூலை 10: விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் புதன்கிழமை வாக்களித்த வாக்காளர்களுக்கு இடது கையின் ஆள் காட்டி விரலில் மை வைக்கப்பட்டது.

கடந்த ஏப்ரல் 19–ஆம் தேதி மக்களவைத் தேர்தல் நடைபெற்றது. அப்போது, வாக்காளர்களின் இடது கை ஆள் காட்டி விரலில் மை வைக்கப்பட்டது. தொடர்ந்து, விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப் பதிவின்போது வாக்காளர்களுக்கு எந்த விரலில் மை வைக்கப்படும் என்ற கேள்வி எழுந்தது.

இந்நிலையில், புதன்கிழமை நடைபெற்ற வாக்குப் பதிவின் போது, வழக்கமாக வைக்கப்படுவது போன்று, வாக்காளரின் இடது கை ஆள்காட்டி விரலிலேயே மை வைக்கப்பட்டது.

தேர்தலின்போது வாக்காளர்களின் விரலில் வைக்கப்படும் மை 45 நாள்களில் அழியும் தன்மை கொண்டது. மேலும், தமிழகத்தில் மக்களவைத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு நடைபெற்று 80 நாள்களைக் கடந்துவிட்ட நிலையில், வழக்கமாக வைக்கப்படும் ஆள்காட்டி விரலிலேயே மை வைக்க தேர்தல் ஆணையம் உத்தரவிட்டிருந்தது.

அதன்படி, விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் வாக்களித்த வாக்காளர்களுக்கு இடது கை ஆள்காட்டி விரலில் மை வைக்கப்பட்டதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்தது.

திருமணக் கோலத்தில் வந்து வாக்களித்த புதுமணத் தம்பதி

கப்பியாம்புலியூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி வாக்குப் பதிவு மையத்துக்கு புதன்கிழமை திருமணக் கோலத்தில் வந்து வாக்களித்த அஜித் – சந்தியா தம்பதியினர்.

விழுப்புரம், ஜூலை 10: விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதிக்கு புதன்கிழமை நடைபெற்ற இடைத்தேர்தல் வாக்குப் பதிவின்போது, திருமணக் கோலத்தில் வந்து புதுமணத் தம்பதி வாக்களித்தனர்.

விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தல் வாக்குப் பதிவு புதன்கிழமை நடைபெற்றது. காலை முதலே வாக்காளர்கள் ஆர்வத்துடன் வந்து நீண்ட வரிசையில் காத்திருந்து வாக்களித்தனர்.

இந்தத் தொகுதிக்கு உள்பட்ட கப்பியாம்புலியூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குப் பதிவு மையத்துக்கு திருமணக் கோலத்தில் தம்பதியர் புதன்கிழமை பிற்பகல் வந்தனர். தொடர்ந்து, வரிசையில் நின்ற அவர்கள் பின்னர் தங்களது வாக்குகளை செலுத்தினர்.

திருமணக் கோலத்தில் வந்தவர்கள் கப்பியாம்புலியூரைச் சேர்ந்த அஜித் – சந்தியா என்பதும், இவர்களுக்கு புதன்கிழமை காலை திருவண்ணாமலையில் திருமணம் நடைபெற்றதும் தெரிய வந்தது. தங்கள் வீட்டுக்குச் செல்வதற்கு முன்பு நேரடியாக வாக்குப் பதிவு மையத்துக்கு வந்து வாக்களித்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

இவர்களுக்கு அங்கு வாக்களிக்க வரிசையில் காத்திருந்த பிற வாக்காளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

‘200 தொலைதூர சொகுசுப் பேருந்துகள் செப்டம்பருக்குள் பயன்பாட்டுக்கு வரும்’

சென்னை, ஜூலை 10: அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு புதிதாக கொள்முதல் செய்யப்பட்டுள்ள 200 தொலைதூர சொகுசு பேருந்துகள் செப்டம்பர் மாதத்துக்குள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும் என போக்குவரத்துக் கழக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தில் நெடுந்தூர பயணங்களுக்கு அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் சார்பில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. 2019–ஆம் ஆண்டுக்கு பிறகு இதுவரை புதிய பேருந்துகள் கொள்முதல் செய்யப்படாமல் இருந்து வரும் நிலையில், தொலைதூர பயணத்துக்காக 200 புதிய சொகுசு பேருந்துகளை வாங்க போக்குவரத்துத் துறை முடிவு செய்தது.

இதையடுத்து, அந்தப் பேருந்துகளில் இடம் பெற வேண்டிய அம்சங்கள் குறித்தும் பொது மக்களிடம் கருத்து கேட்கப்பட்டது. அதன் அடிப்படையில், பல்வேறு வசதிகளுடன்கூடிய சொகுசு பேருந்துகள் தயாரிக்கப்பட்டு தற்போது, அவற்றை பயன்பாட்டுக்கு கொண்டுவரும் பணியில் போக்குவரத்துக் கழகம் ஈடுபட்டுள்ளது.

பிஎஸ் 6 ரகத்தைச் சேர்ந்த 200 பேருந்துகளில், 150 பேருந்துகளில் கீழே 30 இருக்கைகள் மேலே 15 படுக்கை வசதி கொண்டதாகவும் தயாரிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 50 பேருந்துகள் முதியோர் மற்றும் பெண்கள் நலன் கருதி கீழே 20 இருக்கைகள் மற்றும் 5 படுக்கை வசதிகளுடனும், மேலே 15 படுக்கை வசதியுடனும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

தானாகவே தீயை அணைக்கும் எஃப்டிஎஸ் அமைப்பு, பேனிக் பட்டன், மின்விசிறி, திரைச்சீலைகள், சார்ஜிங் போர்ட், படுக்கை தடுப்புகள் என ஆம்னி பேருந்துகளில் உள்ள அனைத்து அம்சங்களும் இதில் இடம்பெற்றுள்ளன.

இதில் முதல்கட்டமாக 25 பேருந்துகள் முழுமையாக கட்டமைக்கப்பட்டு சென்னையில் உள்ள அரசு விரைவு போக்குவரத்துக் கழக தலைமையக பணிமனைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. அங்கு ஆய்வு பணிகள் நடந்து வருகின்றன.

ஜூலை மாதம் இறுதிக்குள் சுமார் 60 பேருந்துகள் முழுமையாக கட்டமைக்கப்பட்டு பயன்பாட்டுக்கு வந்துவிடும். மீதமுள்ள பேருந்துகள் அனைத்தும் செப்டம்பர் 15–ஆம் தேதிக்குள் முழுமையாக பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும். இவற்றை முதல்வர் ஒப்புதலுடன் போக்குவரத்து அமைச்சர் தொடங்கி வைக்கவுள்ளார் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆருத்ரா கோல்டு நிறுவன இயக்குநரின் ஜாமீன் மனு தள்ளுபடி

சென்னை, ஜூலை 10: ஆருத்ரா கோல்டு நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவரான ரூசோவின் ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை அமைந்தகரையை தலைமையிடமாகக் கொண்டு திருவள்ளூர், திருவண்ணாமலை, ஆரணி, செய்யாறு, கோயம்புத்தூர் உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஆருத்ரா கோல்டு டிரேடிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் பண மோசடியில் ஈடுபடுவதாக புகார் எழுந்ததைத் தொடர்ந்து, தமிழக காவல் துறையின் பொருளாதார குற்றப்பிரிவு போலீஸார் 21 பேர் மீது வழக்கு பதிவு செய்தனர். விசாரணையில் அந்த நிறுவனம், 1,09,255 பேரிடம் ரூ. 2,438 கோடி மோசடி செய்தது தெரியவந்தது. தலைமறைவாக இருந்த ரூசோ கைது செய்யப்பட்டார். ரூசோ தனக்கு ஜாமீன் வழங்கக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இந்த மனு நீதிபதி தமிழ்செல்வி முன் விசாரணைக்கு வந்தபோது, ஜாமீன் மனுவை திரும்பப் பெறுவதாக ரூசோ தரப்பில் தெரிவிக்கப்பட்டதையடுத்து, அந்த மனுவை தள்ளுபடி செய்து நீதிபதி உத்தரவிட்டார்.

IDBI BANK
CIN - L65190MH2004GOI148838

ஐடிபிஐ வங்கி லிமிடெட், கூடுவாஞ்சேரி கிளை, எண்.36, ஜி.எஸ்.டி. சாலை, நந்திவரம், கூடுவாஞ்சேரி, பின்-603202, தமிழ்நாடு. தொலைபேசி: 044-27461738.

இதன் மூலம் கடன்தாரர்/ ஜாமீன்தாரர்கள் மற்றும் பொதுவாக பொது மக்களுக்கு அறிவிப்பதாவது 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்தினை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்தினைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் ஷரத்துகளின்படியும் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டத்தின் கீழ் அதிகாரபூர்வ அலுவலரானவர் சொத்தினை கவாதீனம் செய்துள்ளார். கீழே கையொப்பமிட்டுள்ள IDBI வங்கியின் அதிகாரபூர்வ அலுவலரால் மின் ஏல விற்பனை செய்வதற்காக விலைப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி : 1. திரு. G. வசந்த குமார், 2. திருமதி. வளர்மதாய். G, இருவரின் முகவரி: 4 பெரியார் தெரு, நின்னகரை, இந்திரா நகர், மறைமலை நகர், முதல் பிரதான சாலை, ஸ்ரீனிவாசபுரம், காட்டாங்குளத்தூர், சென்னை-603203, தமிழ்நாடு.

கோரிக்கை அறிவிப்பு தேதி : SARFAESI சட்டம், பிரிவு 13(2)ன் கீழ்: 30.03.2022; கவாதீன அறிவிப்பு தேதி : SARFAESI சட்டம், பிரிவு 13(4)ன் கீழ்: 09.06.2022; நிலுவைத் தொகை: 08.07.2024 அன்றுள்ளபடி ரூ.20,95,008.26/- (ரூபாய் இருபது இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரத்து எட்டு மற்றும் பைசா இருபத்து ஆறு மட்டும்) **மேலும் 09.07.2024 அன்று முதல் அதன் மீதான எதிர்கால வட்டி.**

(அசையாச் பிணைச் சொத்தின் விவரங்கள்) செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு இணை-II சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், எண்.32 நின்னகரை கிராமம், சர்வே எண்.6/1 இல் அடங்கிய (L.P.D.T.C.P. எண்.72(R)/2018 இன்படி அங்கீகாரம் பெற்ற மனைப்பிரிவு) "ஸ்ரீ அருணாசலா நகர்", மனை எண்.70 இன் விஸ்தீரணம் 1615ச.அடி வீட்டு மனை அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. **எல்லைகள்:** வடக்கில்: 20 அடி அகல சாலை; தெற்கில்: காலி நிலம்; கிழக்கில்: மனை எண்.69 மற்றும் மேற்கில்: காலி நிலம். **நாற்பரப்புகள்:** வட புறம்: 36.10' அடி; தென் புறம்: 26.60' அடி; கிழக்கு புறம்: 49.3' அடி மற்றும் மேற்கு புறம்: 52.90' அடி; அதனுடன் அதில் தற்போது அமைந்துள்ள மற்றும் எதிர்காலத்தில் அமையவுள்ள அனைத்து கட்டிடம் மற்றும் வசதிகளுடன். **திரு. G. வசந்த குமார் அவர்களுக்குச் சொந்தமான மற்றும் அடமானம் வைக்கப்பட்ட சொத்து.**

குறைந்தபட்ச கேட்பு விலை : ₹25,80,000/- **டேவணி தொகை : ₹2,58,000/-**

சொத்துக்களை பார்வையிடும் தேதி&நேரம்: 22.07.2024 (திங்கள்கிழமை) மதியம் 02.00 மணி முதல் 03.30 மணி வரை

ஏலப்புள்ளிகள் டேவணித்தொகை சமர்ப்பிக்க கடைசி தேதி: 26.07.2024 (வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணி வரை

மின் ஏல தேதி மற்றும் நேரம் **29.07.2027** (திங்கள்கிழமை) காலை 11.45 மணி முதல் மதியம் 12.45 மணி வரை (தலா 5 நிமிடங்கள் கொண்ட கால நீட்டிப்புகள் தொடர்ந்து தரப்படும்).

ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் உள்ள விதிமுறைகள் - நிபந்தனைகளின் சுருக்கம்:

1) விற்பனையானது இந்த விளம்பரத்திலும் "ஏல ஆவணத்திலும்" கொடுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது. விருப்பமுள்ள ஏலதாரர்கள் திரு. நவீன் குமார் அகர்வால் (கைபேசி) 79900 35836 (மின்னஞ்சல்) n.agarwal@idbi.co.in, திரு. குண்டுபள்ளி ஸ்ரீனிவாஸ் (கைபேசி) 9912359568 (மின்னஞ்சல்) guntupalli.srinivas@idbi.co.in & திரு.தில்லேஷ்வர ராவ் கணபதி (கைபேசி) 9591817458 (மின்னஞ்சல்) g.dhilleswararao@idbi.co.in ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

2) ஏல செயல்முறையின் விரிவான நடைமுறை, விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, ஏலதாரர்கள் ஏல ஆவணத்தைப் பார்க்கவும், ஏல ஆவணத்தை ஐடிபிஐ வங்கி லிமிடெட், கூடுவாஞ்சேரி கிளை, எண்.36, ஜி.எஸ்.டி. சாலை, நந்திவரம், கூடுவாஞ்சேரி, பின்-603202, தமிழ்நாடு அனைத்து வேலை நாட்களிலும் பெற்றுக் கொள்ளலாம் அல்லது ஐடிபிஐ வங்கி வலைத்தளத்திலிருந்து 11.07.2024 அன்று முதல் www.idbibank.in மற்றும் https://www.bankeauctions.com, web:www.c1india.com ஆகிய இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

SARFAESI சட்டத்தின் விதி 9(1) இன் கீழ் 15 நாட்கள் விற்பனை அறிவிப்பு

கடன்தாரர்/ஜாமீன்தாரர் ஏலத் தேதிக்கு முன் முழுமையான வட்டி மற்றும் துணை செலவினங்களுடன் மேலே குறிப்பிட்டுள்ள தொகையை செலுத்துமாறு அறிவிக்கப்படுகிறார்கள், தவறினால் சொத்து ஏலம் விடப்பட்டு விற்பனை செய்யப்பட்டு மீதத்தவணை தொகைகள் ஏதும் இருப்பின், அவை வட்டி மற்றும் இதர செலவின தொகைகளுடன் வசூலிக்கப்படும்.

தேதி : 11.07.2024
இடம் : சென்னை

Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
ஐடிபிஐ வங்கி லிமிடெட்

TATA

டாடா கேப்பிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வணிகப் பூங்கா, கணபத்ராவ் காடம் மார்க், லோயர் பரேல், மும்பை-400013.
கிளை அலுவலகம்: டாடா கேப்பிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், 1வது தளம், சென்டன்னியல் சதுக்கம், #6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை - 600024.

அசையாச் சொத்து விற்பனை அறிவிப்பு

(கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) மற்றும் 9(1) ஆகியவற்றின் கீழ்)

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) மற்றும் 9(1) ஆகியவற்றின் கீழான அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான E-ஏல அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்கும் பரவலாகவும் கீழ்க்காணும் கடன்தாரர்(கள்) / கூட்டுக் கடன்தாரர் மற்றும் / அல்லது அன்னாரின் சட்டப்பூர்வ வாரிசுதாரர்கள் / சட்டப்பூர்வப் பிரதிநிதிகள் (கடன்தாரர்கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், பின்வரும் கடன்தாரர்(கள்) மற்றும் கூட்டுக் கடன்தாரர்(கள்) ஆகியோரிடமிருந்து நிலுவைத் தொகைகளைத் திரும்பப் பெறும் பொருட்டு, டாடா கேப்பிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிட., (TCHFL) நிறுவனத்திடம் அடமானம் வைக்கப்பட்டுள்ளதும் TCHFL-இன் அதிகாரப்பூர்வ அலுவலரால் கவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி" மற்றும் "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்"** மற்றும் "திரும்பப் பெறப்பட மாட்டாது" **எனும் முறையில் 29.07.2024** அன்று விற்பனை செய்யப்பட உள்ளது. இதன் குறைந்தபட்ச விலை மற்றும் டேவணித்தொகை விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், விற்பனையில் எந்த ஒத்திவைப்பும் / இடைநிறுத்தமும் இல்லாத நிலையில் குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்து / சொத்து E-ஏலத்தின் மூலம் மேற்குறிப்பிட்டபடி 29.07.2024 அன்று பிற்பகல் 2 மணிக்கு விற்பனை செய்யப்படும். E-ஏலத்தில் கலந்து கொள்வதற்குரிய டேவணித்தொகைக்கான கேட்பு வரைவோலை (D.D) அடங்கிய மூடி முத்திரையிட்ட உறையை **27.07.2024 அன்று மாலை 5.00 மணிக்குள்** TCHFL-இன் அதிகாரப்பூர்வ அலுவலரிடம் சேர்ப்பிக்க வேண்டும். கிளை முகவரி: **டாடா கேப்பிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்,** 1ஆவது தளம், சென்டன்னியல் சதுக்கம், # 6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை-600024.

"உள்ளது உள்ள இடத்தில்" எனும் முறையில் பின்வரும் கடனீட்டுச் சொத்தின் / அசையாச் சொத்தின் குறிப்பிடப்பட்டுள்ள சுருக்க விவரங்களுக்கேற்ப விற்பனை செய்யப்பட உள்ளன.

வ. எண்.	கடன் கணக்கு எண்	கடன்தாரர்(கள்) / கூட்டுக் கடன்தாரர்(கள்) / சட்ட வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி / ஜாமீன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பு நாள்படி தொகை	குறைந்தபட்ச விலை	டேவணித் தொகை (EMD)	கவாதீன வகை
1.	10022896 & TCHHF0404 0001000677 43	திரு. வெங்கடேசன் K திருமதி. V லக்ஷ்மி	ஒப்பந்த எண் 10022896-இன்படி நீங்கள் செலுத்தவேண்டிய நிலுவைத்தொகை ரூ.8726428/- (ரூபாய் எண்பத்தேழு இலட்சத்து இருபத்தாறாயிரத்து நானூற்று இருபத்தெட்டு மட்டும்) மற்றும் ஒப்பந்த எண் TCHHF0404000100067743- இன்படி நீங்கள் செலுத்தவேண்டிய நிலுவைத்தொகை ரூ.1546253/-(ரூபாய் பதினைந்து இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து இருநூற்று ஐம்பத்து மூன்று மட்டும்) மற்றும் 16.06.2022	ரூ.99,90,000/- (ரூபாய் தொண்ணூற்று ஒன்பது இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்)	ரூ.9,99,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரம் மட்டும்)	நேரடி கவாதீனம்

அசையாச் சொத்தின் விவரம்: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய தரைத்தளம். மேல்கட்டுமானத்தின் பரப்பளவு 1180 சதுர அடி மற்றும் கார் நிறுத்துமிடம் மற்றும் பிரிபடாப்பங்கு 865 சதுர அடி உட்பட நிலத்தின் பரப்பளவான 1732.75 சதுர அடியில் அடங்கியது. இத்துடன் வழி சேர்த்து. சர்வே எண் 90, பிளாக் எண் 39, புலியூர் கிராமம், மனை எண் 8 பாகம், பழைய கதவு எண் 16, புதிய கதவு எண் 168, ரங்கராஜபுரம் பிரதான சாலை, கோடம்பாக்கம், சென்னை-600024. எல்லைகள் பின்வருமாறு: **வடக்கு:** டயனமிக் அபார்ட்மெண்ட்ஸ், **தெற்கு:** S. லோகநாதன் அவர்களின் சொத்து, **கிழக்கு:** கதவு எண் 168/1- இல் உள்ள சட்டப்பூர்வ வாரிசு லடீஃப் பாய் அவர்களின் சொத்து, **மேற்கு:** கதவு எண் 167-இல் உள்ள சட்டப்பூர்வ வாரிசு முருகேசா அவர்களின் சொத்து. **அளவு:** கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் - 49 அடி, கிழக்கு மேற்காகத் தெற்குப் பக்கம் - 47 அடி 3 அங்குலம், வடக்குத் தெற்காகக் கிழக்குப் பக்கம் - 22 அடி 6 அங்குலம், வடக்குத் தெற்காக மேற்குப் பக்கம் - 20 அடி 1 அங்குலம். இது கோடம்பாக்கம் சார்பதிவு மாவட்டம் மற்றும் தென் சென்னை பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது.

குறிப்பு: TCHFL (CS/104/2024) க்கு எதிராக மூன்றாம் தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட சிவில் வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது, இந்த வழக்கில் TCHFL க்கு எதிராக எந்த தடை உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. ஏலதாரர்கள் ஏலப்புள்ளிகளை சமர்ப்பிப்பதற்கு முன் உரிய சோதனைகளை செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். ஏலம் வழக்குகளின் தீர்ப்புகளுக்கு கட்டுபட்டதாகும்.

ஏலத்தில் பொது மக்கள் தங்கள் ஏலப்புள்ளிகளை நேரிடையாகத் தாக்கல் செய்யுமாறு அழைக்கப்படுகிறார்கள். கடன்தாரர்(கள்) / கூட்டுக் கடன்தாரர்(கள்) இவ்வறிவிப்பு வெளியானதிலிருந்து 15 நாட்களுக்குள் தங்கள் மொத்த நிலுவைத் தொகையை வட்டியுடன் திருப்பிச் செலுத்த இதன் மூலம் கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது. தவறினால், அசையாச் சொத்து திட்டமிட்டபடி விற்பனை செய்யப்படும். ஏல நாளுக்கு முன்னர் மேலே கூறியபடி நிலுவைத்தொகையை வட்டி மற்றும் செலவினங்களுடன் (விற்பனைக்காகும் செலவினம் உட்பட) 'அதிகாரப்பூர்வ அலுவலரிடம்' செலுத்தி விட்டால் அல்லது குறிப்பிட்ட ஈட்டுறுதிக் கடன் தொகையை வட்டி மற்றும் செலவினங்களுடன் செலுத்தியதற்கான அத்தாட்சியை அவர் நிறைவுறும் வகையில் அளித்து விட்டால் e-ஏலமானது நிறுத்தப்படும்.

விற்பனை செய்யப்படும் அசையாச் சொத்தின் மீது எந்த வட்டியையும் பெறவோ பெற முயற்சிக்கவோ நேரடியாகவோ மறைமுகமாகவோ ஏலம் கோர இந்த விற்பனையில் எந்த அலுவலரோ இதர நபர்கள் யாருமோ பணியமர்த்தப்படவில்லை.

விற்பனையானது கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002-இன் கீழான நிபந்தனைகளுக்கும் பின்வரும் கூடுதல் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டது:

குறிப்பு: சொத்துக்களின் E-ஏலமானது http://bankauctions.in/ எனும் இணையமுகப்பில் 29.07.2024 அன்று பிற்பகல் 2.00 மணிக்கும் பிற்பகல் 3.00 மணிக்கும் இடையில் எண்ணிக்கை வரம்புடன் கூடிய தலா 10 நிமிடக் காலநீட்டிப்புடன் நடைபெறும்.

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:

1. மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு உச்சபட்சமாகத் தெரிந்த வரையிலானவை. எனினும் இந்த அறிவிப்பில் ஏதேனும் பிழையோ, முரண்பாடோ, விடுபாடோ இருப்பின் அதற்குக் கீழே கையொப்பமிட்டுள்ளவர் பொறுப்பாக மாட்டார். ஏலப்புள்ளி அல்லது ஏலதாரர் தொடர்பாக ஏதேனும் சிக்கல் எழுப்பப்பட்டால் ஈடு பெற்றுக் கடனளித்ததவரின் விருப்புரிமைக்கு இணங்க குறிப்பிட்ட அசையாச் சொத்தானது மீண்டும் ஏலத்துக்கு விடப்படும். **2.** சொத்தானது குறைந்தபட்ச விலைக்குக் குறைவாக விற்பனை செய்யப்பட மாட்டாது. **3.** ஏல உயர்வுத் தொகை: **ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்). 4.** சொத்தை வாங்குவதற்காகத் தாக்கல் செய்யப்படும் அனைத்து ஏலப்புள்ளிகளும் மேலே கூறிய டேவணித்தொகைக்கான (EMD) **"TATA CAPITAL HOUSING FINAN